# MANIDHANAEYAM FREE IAS ACADEMY – TNPSC GROUP II & IIA
## UNIT – III – SOCIO ECONOMIC ISSUES
### நாட்டின் வளர்ச்சியின் முறையின் பாதிப்புகள்

**1. வகுப்புவாத மற்றும் வகுப்வாதம் இந்தியாவில் வகுப்புவாதத்திற்கான காரணங்கள்**

**வகுப்புவாதம்:**

இனவாதம் என்பது ஒரு சமூகம் (ம) மதத்தைச் சார்ந்த மக்கள், மற்றொரு சமூகத்தைச் சார்ந்த மக்களின் மீது பகைமை உணர்வைக் கொண்டுள்ளதைக் குறிக்கிறது.

**இந்தியாவில் வகுப்புவாதத்திற்கான காரணங்கள்**

1. காலிஸ்தான், நாகா போன்ற பகுதிகளின் தனி மாநில கோரிக்கைகள்
2. புதிய மாநிலத்திற்கான தீவிர கோரிக்கைகள் (ம) போராட்டங்கள் (எ.கா): தெலுங்கானா
3. யூனியன் பிரதேசங்கள் மாநிலங்களாக மாற்றப்படக்கோரி போராட்டங்கள் (எ.கா): மணிப்பூர், திரிப்பூர்
4. உள்நாட்டு எல்லைப் பிரச்சனைகள் (ம) நதிநீர் பங்கீட்டு பிரச்சனைகள் (எ.கா) சண்டிகர், காவிரி நதிநீர் பிரச்சனை
5. சில மதவாத அமைப்புகள் ''பிராந்தியவாதத்தை'' ஊக்குவிப்பது மட்டுமில்லாமல் அதன் கொள்கைகளும் வன்முறையைத் தூண்டும் வண்ணம் இருக்கும்
6. மண்ணின் மைந்தர்கள் கோட்பாடு – கல்வி, வேலைவாய்ப்பு உள்ளிட்டவைகள். அந்த பிராந்திய மக்களுக்கே வழங்க வேண்டும் என்ற எண்ணத்தை விதைக்கின்றது. (எ.கா): அசாம் அசாமியருக்கே

**வகுப்புவாத வளர்ச்சிக்கான காரணங்கள்**

**1. காலனி ஆதிக்கத்தின் கொடை**

1. பிரிட்டிஷ் அரசு வகுப்பு வாதத்தை ஊக்குவித்தது
2. முஸ்லீம்களுக்கு தனி இடஒதுக்கீடு வழங்கியது

**2. விடுதலைப் போராட்டத்தலைவர்களின் பங்கு**

1. சமய சீர்திருத்த வாதிகளில் ஒருசாரார் கடந்தகால இந்து சமயத்தைப் புதுப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.
2. திலகர் காலனி ஆட்சிக்கு எதிராக மக்களை ஒன்றுதிரட்ட கணபதி, (ம) சிவாஜி சதுர்தி விழாவை பயன்படுத்தினார்.

**3. பிரிவினையும் வகுப்புவாதமும்**

இந்திய – பாகிஸ்தான் பிரிவினை

**4. இந்து சமயப் பற்றுவாதம்**

**5. வகுப்பு வாத அமைப்புகள்**

**6. எதிர்ப்பும் ஏமாற்றமும்**

1. வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் ஏமாற்றமடைந்தனர்.
2. வகுப்புவாதிகள் மன உணர்வைத்துண்டி விட்டனர்.
3. வறுமை (ம) வேலைவாய்ப்பின்மை போன்ற பிரச்சனைகளை புறந்தள்ளிவிட்டு வகுப்பு வாதத்தில் ஈடுபட்டனர்.

**7. அரசியல் நடவடிக்கைகள்: அரசியல் இனவாதிகளால் மக்களின் வாயிலாக ஊக்குவிக்கப்படுகிறது.**

**8. வாக்கு வங்கிகள்**

சமய அடிப்படையில் வேட்பாளர்கள் தேர்வு, அமைச்சர் பதவி, அரசாங்க பொறுப்புகள் வழங்கப்படுதல்

**9. சிறுபான்மையினரின் பிரச்சனைகள்**

வாய்ப்பும் சலுகையும் முறையாக வழங்கப்படாமல் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர்.

**2. இந்திய சமுதாயத்தின் மீது வகுப்புவாதத்தின் தாக்கம் (விளைவுகள்)**

1. பெரும்பான்மையாக கொலை செய்யப்படுபவர்கள் ஒன்றுமறியா ஏழைகள்
2. அவர்கள் வீடுகள், உடைமைகள், வாழ்க்கை வாழ்வாதாரம் முற்றிலுமாக சிதைக்கப்படுகிறது.
3. இது அனைத்து பிராந்தியங்களிலும் ‘‘மனிதஉரிமை மீறலுக்கு ‘‘வழி கோறுகிறது.
4. சில நேரங்களில் குழந்தைகளின் பெற்றோர்கள் இறந்து விடுவதால், அக்குழந்தைகள் பராமரிக்க ஆதரவில்லாத நிலையில், இறுதியாக வாழ்நாள் முழுவதும் அனாதையாக வாழ வேண்டிய அவல நிலைக்கு ஆளாகின்றனர்.
5. பிராமணம் (ம) அகதிகள் பிரச்சனைகள் இனக்கலவரங்கள் தூண்டப்பட்ட மற்றொரு பரிமாணங்களாக உள்ளன.
6. இனவாதமானது ‘‘அரசியலமைப்பு கோட்பாடுகள்’’ மதச்சார்பின்மை, மதசகிப்புத்தன்மை ஆகியவற்றிற்கு அச்சுறுத்தலாக உள்ளது.
7. நாட்டின் ஒற்றுமை (ம) ஒருமைப்பாட்டிற்கு ஊறுவிளைவிக்கும் வகையில்உள்ளது.
8. இது மக்களை பல்வேறு இனக்குழுக்களாக பிரிக்கவும் வெறுப்புணர்வை தூண்டுவதிலும் முக்கிய பங்காற்றுகிறது.
9. சமூக முன்னேற்றத்திற்கு தடைக்கல்லாகவும், சமுதாயத்தின் பின்னடைவுக்கு காரணமாகவும் உள்ளது.

**3. வகுப்புவாதத்தின் பரிமாணங்கள்**

**1. அரசியல் வகுப்புவாதம்**

அரசியல் சந்தர்ப்பவாதத்திற்காகவும், தேர்தல் வாக்குகள் பெறுவதற்காகவும், ஒருவருடைய தவறுகளையெல்லாம் சுட்டிக்காட்டுவதுபோல் சுட்டிக்காட்டிவிட்டு, அதே நேரத்தில் மக்களின் மனதை வேறுவகையில் திசைதிருப்பி கலவரங்களை தூண்டுவது.

**2. ஒருங்கிணைந்த வகுப்புவாதம்**

1. சிறிய மதக்குழுக்கள் / பிரிவுகள் பெரிய மதக்குழுக்கள் / பிரிவுகளுடன் ஒருங்கிணைவது
2. இத்தகைய வகுப்புவாதமானது தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் இந்துக்களே என்றும், சமண, சிக்கிய (ம) புத்த சமயங்களை சார்ந்த அனைவரும் இந்துக்கள் என்றும். அவர்கள் அனைவரும் இந்து திருமணச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் என்று கோருகின்றது.

**3. நல்வாழ்வு வகுப்புவாதம்**

1. ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர், தங்களது சமூகத்தினரின் வாழ்க்கை தரத்தினை உயர்த்துவதோடு, சுகாதாரம் (ம) கல்விக்கான உதவிகளை செய்வதாகும்.
2. (எ.கா) பார்சி சமூகத்தின் அவர்களது சமூகத்தினரின் மேம்பாட்டிற்காக பாடுபடுவது

**4. ஒதுங்கும் வகுப்புவாதம்**

1. சிறிய மதப்பிரிவினர் அரசியலை விட்டு விலகியிருப்து
2. (எ.கா). பகாய் சமூகத்தினர் அரசியல் செயல்பாடுகளில் தங்களது சமூக உறுப்பினர்கள் பங்கெடுத்துக் கொள்வதை பகாய் சமூகம் அனுமதிக்கவில்லை.

**5. பழிவாங்கும் வகுப்புவாதம்**

பிற மதத்தைச் சார்ந்தவர்களுக்கு கேடு விளைவிப்பதோடு, வேதனைப்படுத்தி, காயப்படுத்துவதாகும்.

**6. பிரிவினை வகுப்புவாதம்**

1. ஒரு மத (அ) கலாச்சார குழு தங்களது குறிப்பிட்ட கலாச்சாரத்தை நிலைநிறுத்திக் கொல்வதற்காகவும், நாட்டிற்குள்ளேயே தனி ராஜ்யம் வேண்டும் என்பதற்காகவும் போராட்டம் மேற்கொள்வதை பிரிவினை வகுப்பு வாதம்
2. (எ.கா) அசாமில் போடோக்கள்

**7. தனிநாடு கோரும் வகுப்புவாதம்**

1. குறிப்பிட்ட மதத்தினர் தங்களுக்கென்று அரசியல் அங்கீகாரம் கிடைக்க வேண்மென்று தனிநாடு கோருவது
2. (எ.கா) சீக்கிய மதத்தைச் சார்ந்தவர்கள் மிகவும் எண்ணிக்கையில் குறைவான தீவிரவாதிகள் காலிஸ்தான் என்ற தனிநாடு கோருவது.

**4. இந்தியாவில் இனவாதத்தின் பரிணாம வளர்ச்சியை விவரி.**

**பரிணாம வளர்ச்சி**

**முதல்நிலை**

1. இங்கு மக்கள் ''ஓரேமதம்'' என்ற கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டு இருந்தனர்.
2. அம்மதமானது எல்லோர்க்கும் பொதுவான 'மதச்சார்பற்ற' கொள்கைகளைக் கொண்டிருந்தது.
3. இதுவே மதம் சார்ந்த சமூக பொருளாதார எண்ணங்கள் கொண்ட சமுதாயம் உருவாக அடிப்படையாக இருந்தது.

**இரண்டாம் நிலை**

1. பல்வேறு மதங்களின் களஞ்சியமான இந்தியாவில் வேறுபட்ட ''இனவாத கருத்தில் கொள்கைகள்'' ஊற்றெடுக்க தொடங்கியது.
2. ஒரு மதத்தினரின் சமுதாய, பொருளாதார, கலாச்சார அரசியல் நோக்கங்கள் மற்றொரு மதத்தினரிடம் இருந்து முற்றிலும் வேறுபாடு இருந்தது.
3. எனவே இந்நிலை சுதந்திரமான மதவாத இனவாதம் என்று அழைக்கப்பட்டது.

**மூன்றாம் நிலை:**

1. இந்த நிலையில் இனவாதமானது பல்வேறு சமுதாயங்களின் விருப்பங்கள் ஒன்றுக்கொன்று தகாதவைகளாகவும், பகைமை உணர்வு (ம) விரோதத்தை வளர்க்கக்கூடியதாகவும் பரஸ்பர உணர்வுகள் அற்றதாகவும் மாறியது.
2. மேலும் இனவாதிகள் பல்வேறு சமுதாயங்களானது பொதுவான மதச்சார்பற்ற கருத்துக்களைக் கொண்டிருக்க முடியாது என்ற கருத்தை ஆணித்தரமாக வலியுறுத்த தொடங்கினர்.
3. தீவிர மதவாதம் என்பது பயம் (ம) வெறுப்புணர்வை அடிப்படையாகக் கொண்டது.
4. மேலும் மதம், செயல்பாடு, நடத்தையில் வன்முறைகளைப் புகுத்தி அரசியல் எதிர்பாளர்களுடன் மொழிப்போரில் ஈடுபடுத்துவது ஆகும்.
5. இனவாதமானது 3 நிலையிலும் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாக அமைந்துள்ளதோடு மட்டுமல்லாமல், தொடர்ச்சியாக ஒன்றின் மீது ஒன்று செயலாற்றுகின்றது. இதுவே நவீன அரசியலின் வளர்ச்சிக்கு ஊன்று கோலாக இருந்தது.

**விளைவுகள்:**

1. இது காலனி ஆதிக்கம் சார்ந்த இந்தியப் பொருளாதாரத்திற்கு விளைபொருளாக அமைந்தது.
2. ஆங்கிலேயர் ஆட்சி இனவாதக் கொள்கையின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றியது.
3. மதவன்முறை என்பது மதவாத குழுக்களிடையே குற்றச் செயல்களைத் தூண்டி அவர்களால் உண்டாகும் வன்முறை செயல்கள் ஆகும்.

4. மேலும் வன்முறைக் குழுக்கள், தங்கள் குழுவினரிடையே ஒற்றுமையைப் பேணுவதோடு மட்டுமல்லாமல், பலியாட்டுகளையும் குழுவின் உறுப்பினர்களுக்காகவே தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர்.

**5. இந்தியாவின் பெரும் மத / இனக்கலவரங்கள்**

**1. கல்கத்தா கலவரம் – 1946**

1. இந்திய வரலாற்றில் கல்கத்தா கலவரம் ''நேரடி நடவடிக்கை நாள்'' என்ற கருப்பு நாளாக அமைந்தது.
2. வங்காள மாகாணத்தில் இந்து – முஸ்லீம் மக்களிடையேயான வன்மத்தால் இக்கலவரம் உண்டானது.

**2. சீக்கிய கலவரம் – 1984**

1. 1984 ஆம் ஆண்டு நவம்பர் 1 அன்று சீக்கியப் படுகொலை நிகழ்ந்தது.
2. இந்திராகாந்தியின் படுகொலையை அடுத்து, டெல்லியின் யமுனா நதிக்கரையருகே நிகழ்ந்த கலவரத்தால் 800 சீக்கியர்கள் கொல்லப்பட்டனர்.

**3. காஷ்மீர் கரலவரம் – 1986**

1. 1986 முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக உள்ள காஷ்மீரில் இந்துக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட கலவரம் ஆகும்.
2. அம்மாநிலத்தின் 'ஆனந்த நாக்'' பகுதியில் இந்துக்கள் பெருமளவில் தாக்கப்பட்டனர்.

**4. வாரணாசிக் கலவரம் – 1989**

1. இந்தியாவின் புனித நகரமாகக் கருதப்படும் வாரணாசியில் 1989 முதல் 1992 வரை தொடர்ச்சியாக மூன்று கலவரங்கள் நடைபெற்றன.
2. 1989 ல் இந்து – முஸ்லீம் வன்மத்தால் முதல் கலவரம் நிகழ்;ந்தது.
3. 2007 ல் சிறிய கலவரம் ஒன்றும் நிகழ்ந்தது.

**5. பகல்பூர் கலவரம் – 1989**

1. சில்க்சிட்டி என்றழைக்கப்படும் பகல்பூர் இக்லேவரத்தால் மிகவும் மோசமாகப் பாதிப்படைத்தது.
2. இந்தியாவில் சுதந்திரத்திற்கு பின்பு நிகழ்ந்த மிகமோசமான மதக் கலவரம்.
3. இந்து – முஸ்லீம் வேற்றுமை காரணமாக 2 மாதம் நீடித்த இக்கலவரத்தினால் 1000க்கும் மேற்பட்ட மக்கள் பாதிப்படைந்தனர்.

**6. பம்பாய் கலவரம் – 1992**

1. 1992 டிசம்பர் (ம) 1993 களில் நிகழ்;ந்த கலவரம் பாபர்மசூதி இடிப்பின் காரணமாக நிகழ்ந்த இனக்கலவரத்தால் 1000க்கும் மேற்பட்ட மக்கள் இறந்தனர்.
2. மேலும் 1993 ல் மும்பையில் நடந்த குண்டு வெடிப்பிற்கும் இதுவே காரணமாகும்.

**7. குஜராத் கலவரம் – 2002**

1. 2002 ம் ஆண்டு தொடர்ச்சியான இந்து – முஸ்லீம் கலவரம் நிகழ்ந்தது.
2. முஸ்லீம் கலவரக் கும்பலால் முன்கூட்டியே திட்டமிட்டு சபர்மதி விரைவு ரயில் எரிக்கப்பட்டது.
3. கோத்ரா ரயில் எரிப்பு (ம) அகமதாபாத்தின் நரோடா பாட்டியா சம்பவம் ஆகியவை உச்சநிலைக்கு சென்றது.

**8. டெகாஸ்கா கலவரம் – 2010**

மேற்கு வங்காளத்தின் டெகாஸ்கா பகுதியில் முஸ்லீம் மதவாதக் கும்பலால், இது மக்கள் (ம) இந்துக்களின் புனித இடங்களான கோவில்கள் (ம) கடைகள் பெருமளவில் எரிக்கப்பட்டன.

**9. அசாம் கலவரம் – 2012**

1. இந்தியாவின் போடா இனத்தவர்க்கும், வங்காள தேசத்தில் இருந்து புலம் பெயர்ந்த முஸ்லீம் மக்களுக்கும் இடையே இனக் கலவரம் மூண்டது.
2. 80 பேர்க்கு மேல் இறப்பு (ம) பல ஆயிரம் மக்கள் வீடுகளை இழந்தனர்.

**10. முசாபர்நகர் கலவரம் – 2012**

1. உத்திரப்பிரதேசத்தில் உள்ள முசாபர் நகரில் 2013ல் நிகழ்ந்த இந்து – முஸ்லீம் கலவரத்தால் 48 பேர் இறந்தனர்.
2. 93 பேர் காயமடைந்ததாக தகவல்கள் வெளிவந்தன.

**6. இந்தியாவில் வகுப்பு வாத கலவரங்களின் இயல்புகளும் தீர்வுகளும்**

**வகுப்புவாத கலவரங்களின் இயல்புகள்**

1. மதத்தின் பெயரால் ஏற்படும் வகுப்புக் கலவரங்களை விட அரசியல் தூண்டுதலினால் ஏற்படும் வகுப்புக் கலவரங்களே அதிகமாக உள்ளது.
2. சில அரசியல்வாதிகள் சில உள்ளூர் தலைவர்கள், சாதி மனப்பான்மை உடையோர் ஆகியோராலேயே வகுப்புக் கலவரங்கள் தூண்டிவிடப்படுகின்றன.
3. தங்களது அரசியல் செல்வாக்கை பலப்படுத்திக் கொள்வதற்காகவும், பொது மக்களிடையே ஒரு சிறந்த பெயரை வாங்கிக் கொள்வதற்காகவும், தங்களது கௌரவத்தை நிலைநிறுத்திக் கொள்ளவும் வகுப்பு வாதத்தை பயன்படுத்துகின்றனர்.
4. வகுப்புக் கலவரங்கள் தீவிரமடைவதற்கு பொருளாதார சிக்கல்களும் முக்கிய பங்கை ஆற்றுகின்றன.
5. வகுப்புக் கலவரங்கள் தென்னிந்தியா, கிழக்குப் பகுதிகளில் நடைபெறுவதைவிட வட இந்தியாவிலேயே மிகவும் அதிகமாக நிகழ்கிறது.
6. பெரும்பாலும் வகுப்புக் கலவரங்கள் மத திருவிழாக்களின் பேதே நடைபெறுகிறது.
7. வகுப்புக் கலவரங்களின் போது, பயங்கர ஆயுதங்கள் உச்சகட்டத்தில் பயன்படுத்தப்படும்.
8. குறிப்பாக ஒரு நகரத்தில் 2(அ) 3 முறை மிகவும் தீவிரமாக வகுப்புக் கலவரங்கள் நடத்திருந்ததென்றால், மீண்டும் அந்த இடத்தில் கலவரங்கள் நடக்காது.

**தீர்வுகள்:**

1. நமது பண்பாடு, நாகரிகம், இந்தியாவின் பன்முகத்தன்மை, சமயச்சார்பற்ற அரசு போன்ற நவீன மதிப்பீடுகளை வகுப்புவாதம் அழிக்கிறது என்பதை சுட்டிக்காட்ட வேண்டும்.
2. வகுப்பு வாதக் காரணங்களுக்காக மதத்தைப் பயன்படுத்துவது (ம) உண்மையான மதக்கருத்துக்கள் இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை மக்களுக்கு தெரிவிக்க வேண்டும்.
3. வகுப்புவாதத்திற்கு எதிரான போர் என்பது, உண்மையான போர்க்களத்தில் நிற்பது போன்றது என்பதை நாம் உணர வேண்டும்.
4. வகுப்பு வாதிகள் தங்களது நடைமுறைத் தந்திரங்களை மாற்றி வருகின்றனர். இதனைப் பரிசீலித்து அதற்கேற்ப எதிர்வினைகளை வகுக்க வேண்டும்.
5. தீபாவளி, ஹோலி,ஈத், ஓணம், கிறிஸ்துமஸ் போன்ற திருவிழாக்களை பொது விழாக்களாக நாம் முன்னிறுத்த வேண்டும்.
6. அனைத்து சமய தலைவர்களையும் கூட்டி ஒரு அமைதிக்குழுவை உருவாக்குதல்
7. வகுப்புவாத கலவரத்தை ஒடுக்க அரசு இயந்திரங்களை நவீனமய மாக்குதல்
8. வகுப்புவாத கலவரங்களின் போது, காட்சி (ம) அச்சு ஊடகங்களின் பொறுப்பற்ற போக்கினை அரசு நெறிப்படுத்துதல்

9. வகுப்புவாத உணர்வுகளை தூண்டும் வகையில் செயல்படும் அரசியல் கட்சிகளை தடைசெய்தல்
10. வகுப்புவாத கலவரங்களில் பாதிப்படைந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கிடவும், கலவரங்களில் ஈடுபடுவோர் மீது வண்டி எடுக்க சிறப்பு நீதிமன்றங்களை அமைத்தல்
11. கல்வி பாடத்திட்டத்தில் சமய சார்பற்ற கருத்துக்களுக்கு முன்னுரிமை தந்து வகுப்புவாத உணர்வினை தூண்டும் பாடங்களை நீக்குதல்
12. மனிதநேயம் போற்றும் அமைப்புகளுக்கு அரசு ஊக்கமளித்தல்
13. அச்சமும் பீதியும், பாதுகாப்பற்ற உணர்வும் நீக்கப்பட வேண்டும். இதற்குத் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் சிறுபாண்மை மக்களுக்குச் செய்துவர வேண்டும்.

**7. வகுப்புவாத வன்முறை கொள்கைகள்**

**வகுப்புவாதம்**

ஒரு மதத்தினர் பிறமதத்தினர் மீது காட்டும் காழ்ப்புணர்ச்சி

**1. சமூக பிணைப்பு கோட்பாடு**

1. ஏமாற்றம், மன அழுத்தம், வன்முறை
2. எதிர்பார்ப்பு புறக்கணிக்கப்படுவதாக எண்ணுவர்
3. வகுப்புவாத வெறுப்பு எற்படும்
4. கூட்டு விரோத மனப்பான்மை உண்டாகும்.
5. குழுவில் உள்ள சிலரே போராட்டம் வெற்றிபெற வன்முறை அவசியம் என கருதுகின்றனர்.
6. வன்முறையில் ஈடுபடும் துணைக்குழுவின் நடவடிக்கை அந்த மொத்த குழுவையும் பிரதிபலிப்பதகாது.

**2. சமூக பொருளாதார கோட்பாடு**

1. பொருளாதார சுரண்டல் வன்முறைக்கு காரணமாகிறது.
2. வேலைவாய்ப்பு மறுக்கப்படுவதாக எண்ணுவர்.
3. இது வன்முறைக்கு வித்திடும்

**3. சமூக தடை கோட்பாடு**

1. சமூகத்தின் மீது வெறுப்பை ஏற்படுத்துகிறது.
2. தீங்கு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை உண்டுபண்ணுகிறது.
3. சமூக அடக்குமுறைகள் (ம) உயர்குடிமக்களின் அதிகாரம் ஆகியவற்றால் பாதிக்கப்படுவர்.
4. இது ஒருங்கிணைந்த வகுப்புவாதத்திற்கு வித்திடும்.
5. அதிகார வர்க்கத்தின் அடக்குமுறையை எதிர்க்க நேரிடும்.
6. சமூக விதிகள் (ம) சமூக அமைப்புகளின் மீது வெறுப்பு, பாரபட்சத்தை ஏற்படுத்தும்.
7. வன்முறையை அழைப்பவர்கள், தாங்கள் பாதுகாப்பு இல்லாமல் பதட்டமாக உணர்வதால், அவர்கள் வன்முறையில் ஈடுபடுகின்றனர்.

**4. கொத்து முனைவர்க்க கோட்பாடு**

1. குறிப்பிட்ட பிரச்சனை மீது மக்களின் நாட்டம் அதிகம்
2. முனைவாக்கம் – கலவரத்திற்கு முன் ஒரு குழு (அ) சித்தாந்தத்தின் மீது ஏற்படும் முனைவு.
3. கொத்து – கலவரத்திற்குப் பின் இரண்டாக பிரிந்த பிரிவினர் வாழும் இடம்
4. தனிநபர் (ம) குழுக்களை உணர்வு ரீதியாக (அ) உடல் ரீதியாக ஒன்றுதிரட்டும் தீவிர ஈடுபாடாகும்.

5. கொத்தாக வாழும் சமூக இயக்கவியல், கலவரம் உருவாகும் சூழ்நிலைக்கு உகந்ததாக விளங்குகிறது.
6. ஏனெனில் உளப்பகுப்பாய்வு மோசமாகி எரிச்சலை ஏற்படுத்தும்
7. ஒரு நபர் தன்னை ஒத்தமுனைப்பைக் கொண்ட மக்களிடையே தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள ஒரு தூண்டுகோலாக விளங்குகிறது.

**8. இந்தியாவில் வகுப்புவாதம்**

இந்திய சமுதாயம் பன்முக இனமத அமைப்புடையது.

**2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி,**

1. இந்துக்கள் - 80.50%
2. முஸ்லீம்கள் - 13.40%
3. கிறிஸ்தவர்கள் - 2.30%
4. சீக்கியர்கள் - 1.90%
5. புத்தர்கள் - 0.80%
6. சமணர்கள் - 0.40%

**1. இந்து – முஸ்லீம் வகுப்புவாதம்**

1. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தொடங்கியது.
2. 1936-முஸ்லீம் லீக் தேர்தல்களில் குறைந்த அளவே வென்றது.
3. ஜின்னா - இஸ்லாம் அபாயத்தில் இருப்பதாக அறிவித்தார்.
4. இந்து மகாசபை, ஆர்எஸ்எஸ் போன்ற இந்து சமுதாய குழுக்கள் தோன்றின.
5. பிரிவினைவாத கலாச்சாரம் இலட்சக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.
6. சுதந்திரத்திற்குபின் உத்திரப்பிரதேசம், பீகார் வங்காளம் மாநிலங்களில் மதக்கலவரங்கள் நடைபெற்றுள்ளன.
7. 1993 – பாம்பே கலவரம்
8. 2002 – கோத்ரா கலவரம்
9. 1992 ஏற்பட்ட ராமஜென்ன் பூமி – பாபர் மசூதி பிரச்சனை

**இந்து – முஸ்லீம் விரோதத்திற்கான காரணங்கள்**

1. இஸ்லாமிய படையெடுப்பு, இந்து மக்கள் கோயில் செல்வங்கள் கொள்கையிட்டது.
2. இந்து கோயில் மீது (அ) அருகே மசூதிகள் எழுப்பியது.
3. பிரித்தாளல் எளிது என்பதை உணர்ந்த, ஆங்கில ஏகாதிபத்திய அரசு இஸ்லாமிய பிரிவினைவாதத்திற்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தது.
4. இந்திய – பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னர், சில இஸ்லாமியர் பாகிஸ்தான் அணி கிரிக்கெட்டில் இந்தியாவை வெல்லும் போது பாகிஸ்தானிய கொடியை ஏந்துவது
5. இந்திய சுதந்திர நாளை கறுப்பு தினமாக சில இஸ்லாமியர் அமைப்பு அனுக்ஷ்டிப்பது.
6. இஸ்லாமிய அரசியல் கட்சிகள் ஒரு தனித்த தீவிரத் தன்மையை காட்டி, இந்தியாவில் இடம்பெற முயல்கின்றன.
7. மேற்கு ஆசியா (ம) பாகிஸ்தானில இஸ்லாமிய தீவிரவாதம் மேலோங்கி வருவதால், இங்குள்ள இஸ்லாமிய தலைவர்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்.
8. எனவே அவர்கள் இந்தியாவிலுள்ள அனைத்து இஸ்லாமியர்களையும் ஒருங்கிணைத்து அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் முயற்சியில் இறங்குவதில்லை.
9. அரசு இஸ்லமியர்களை புறக்கணித்துள்ளதாக உணர்கின்றனர். எனவே சுயநலமுடைய சிலதலைவர்கள் வகுப்பு வாதத்திற்கு வித்திடுகின்றனர்.

**2. இந்து சீக்கிய வகுப்புவாதம்**

1. இந்து மதத்திற்கு எதரான சீர்திருத்த இயக்கம்
2. சீக்கிய மதகுருமார்களின் ஆதிக்கத்திற்கு எதிராக அகாலிதளம் உருவானது.
3. 1973 – அனந்தபூர் சாகிப் தீர்மானம் நிறைவேற்றம்
4. பிந்த்ரன் வாலே தனிமாநிலம் கோரினார்.
5. 1984– நீலநட்சத்திர நடவடிக்கை
6. அமிர்தசரஸ் பெற்கோயிலில் இருந்த தீவிரவாதிகள் கைது
7. இந்திராகாந்தி கொல்லப்பட்டார்.
8. 1984, நவம்பர் 1ல் ஆயிரக்கணக்கான சீக்கியர்கள் கொல்லப்பட்டனர்.
9. 1986 – பொற்கோவிலில் இருந்து தீவிரவாதிகளை வெளியேற்றுவதற்கான பிளாக் தண்டர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
10. 1993 முதல் இரு மதத்தினரிடையே குறிப்பிடத்தக்க அளவில் உறவு முறையில் மாற்றம் வந்துள்ளது.

**3. இன வன்முறைகள்:**

1. அசாமில் போடோலேண்ட் பிரச்சனை
2. அசாமில் உல்ஃபா இயக்கம்
3. இலங்கை தமிழர்கள் பிரச்சனை போன்றவை

**9. வகுப்புவாத கலவரங்களுக்கான காரணிகளை விளக்குக.**

வகுப்புவாத கலவரங்களுக்கான காரணிகள்

**1. சமூக காரணிகள்**

1. சமுதாய மரபுகள், வேறுபாடு
2. சாதி, உயர்வகுப்பு உணர்வு
3. மதம் சார்ந்த அடுக்கமைப்பு

**2. மத காரணிகள்**

1. மத கட்டுப்பாடு தளர்வு
2. மதச்சார்பற்ற நெறிமுறை
3. மத கண்ணோட்ட குறுகிய தீவிர பற்று நெறிகள்
4. அரசியல் ஆதாயத்திற்கு மதத்தை பயன்படுத்துதல்
5. மதத்தலைவர்களின் தீவிரவாத கொள்கைகள்

**3. அரசியல் காரணங்கள்**

1. மதம் சார்ந்த அரசியல்
2. மத அடிப்படையில் தேர்தல்களில் வாக்குகள் சேகரித்தல்

**4. பொருளியல் காரணங்கள்**

1. பொருளாதாரச் சுரண்டல்
2. சிறுபான்மை மத சமுதாயத்தினரை வேறுபடுத்துதல்

**5. சட்ட காரணங்கள்**

1. பொது சிவில் சட்டம்
2. சல சமுதாயத்தினருக்கு அரசியலமைப்பு வழங்கியுள்ள தனிப்பிரிவும் சலுகைகளும்

**6. மனநிலை காரணங்கள்**

1. சமுதாய விருப்பு வெறுப்புகள்
2. ஒரேவித பழையவழி தடமாறுபாடா சிந்தனைகள்
3. நம்பிக்கை இன்மை
4. பிறமதத்தினரின் துயர்கண்டும் அக்கரையற்றதன்மை

**7. நிர்வாக காரணங்கள்**

1. நல்ல பயிற்சி (ம) தயாரிப்பு நிலையில்லா காவலர்

2. காவலர் (ம) பிற அதிகாரிகளிடையே ஒருங்கிணைப்பு இன்மை

**8. வரலாற்று காரணங்கள்**

1. அந்நிய படையெடுப்பு
2. மத நிறுவனங்கள் தாக்கப்படுதல்
3. மதமாற்ற முயற்சிகள்
4. ஏகாதிபத்ய காலனி ஆட்சிக்காரர்களின் பிரித்தாளும் சூழ்ச்சி

**9. பிராந்திய காரணங்கள்**

1. பிராந்திய சமுதாய விரோத சக்திகள்
2. நிலத் தகராறு
3. கோகூஷமிடுதல், மத ஊர்வலங்கள்

**10. சர்வதேச காரணங்கள்**

1. அந்நிய நாடுகள் வழங்கும் பயிற்சி நிதியுதவி
2. பிறநாடுகள் திட்டமிட்டு இனமதவாத அமைப்புகளை ஆதரித்து இந்திய ஒற்றுமையை குலைத்து பலவீனப்படுத்தும் முயற்சிகள்

**10. தேசிய ஒருமைப்பாடு இயக்கம் குறிப்பெழுதுக.**

**தேசிய ஒருமைப்பாடு இயக்கம்**

உறுப்பினர் – கேபினட், CM, SC / ST

**1. துவக்கம்: 1962**

தலைவர் – பிரதமர்

**2. நோக்கம்:** இன உணர்ச்சி (ம) மண்டலங்கள் குறித்த பிரச்சனைகளை கவனித்தல்

3. 1962 ல் 2 குழுக்களை அமைத்தது

4. ஆனால் இம்முயற்சி தொடரவில்லை. ஏனெனில் சீனபடையெடுப்பின் விளைவாக தேச ஒற்றுமை உருவானது.

1. தேசிய ஒருமைப்பாடு குழு – 196
2. 1968ல் துவங்கப்பட்ட போது, 3 குழுக்கள் நிறுவப்பட்டது.
3. குழுக்கள் – இன உணவு பிரச்சனைகள், மண்டலப் பிரச்சனைகள், கல்வி பிரச்சனைகள் கவனிப்பதற்கான குழு
4. இக்குழுக்கள் அனைத்துமே வழிமுறைகளை உருவாக்குதல், சட்டமியற்றுதல், நிர்வாக செயல்பாடுகளுக்கான அறிவுரை வழங்குதல்
5. இவை 1970 ல் செயலிழந்தன.
6. தேசிய ஒருமைப்பாடு குழு – 1986
7. இக்குழு பஞ்சாப் மீது கவனம் செலுத்தியது.
8. சிறுபான்மை மக்களின் நலன்களை பாதுகாப்பதற்காக (ம) தேசிய ஒருங்கிணைப்பை, சமூக ஒற்றுமையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைக்க 5 நபர் கொண்ட குழு அமைக்கப்பட்டது.
9. தேசிய ஒருமைப்பாடுகுழு – 1990
10. பஞ்சாப், காக்ஷ்மீர், அயோத்தியா பிரச்சனைகளை கையாள்வதற்காக அமையப்பெற்றது.
11. 1993ல் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் கூட்டம் நடைபெற்றது.

**தற்போதைய நிலை:**

1. 2008 ல் பிரதமர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.
2. 2011ல் உள்நாட்டு பாதுகாப்பு குறித்து கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது.
3. 2019 லும் கூட்டம் நடைபெற்றுள்ளது. (16 கூட்டங்கள்)

**அமைப்பு**

1. தலைமை – பிரதமர்
2. துணை தலைமை – உள்துறை அமைச்சர்
3. உறுப்பினர் – அனைத்து மாநில முதலமைச்சர்

**11. வகுப்புவாத கலவர பிரச்சனைகளை சமாளிப்பதில் காவல் துறையின் பங்கு**

1. வகுப்புவாத கலவரங்களுக்கு காரணமானவர்களை கைது செய்தல்
2. கலவரக்காரர்களை கலைந்து போகச் செய்தல்
3. பொதுச்சொத்துக்கள் சேதம் அடையாமல் பாதுகாத்தல்
4. புரளிகள் பரவமால் தடுத்தல்
5. பொது ஆணையை நிலைநாட்டுதல்

**இடர்பாடுகள்:**

1. அதிகார வர்க்கத்தினர், அரசியல் வாதிகள், நீதித்துறை, மக்களின் ஆதரவு இருந்தால் மட்டுமே காவல்துறை சிறப்பாக செயல்பட முடியும்.
2. அரசியல் வாதிகள் சுயநலத்துடன் இருப்பதும்
3. அதிகார வர்க்கத்தினர் சடங்குகளை பின்பற்றுபவர்களாக இருப்பதும்
4. நீதித்துறை அதிகாரிகள் மரபுவழி பழக்க வழக்கங்களை பின்பற்றுவதும்
5. மக்கள் காவல்துறையினரின் மீது நம்பிக்கையின்றி இருப்பதும்.
6. காவல்துறையினர் பல்வேறு வற்புறுத்துதலுக்கு உள்ளாவதும் முக்கிய இடங்களாகும்.

**நடவடிக்கைகள்**

1. வகுப்புக் கலவரங்கள் அடிக்கடி நடைபெறும் மாநிலம் (ம) மாவட்டங்களை காவல்துறையினர் கண்காணித்தல்.
2. வகுப்புக் கலவரம் தோன்றுவதற்கான அறிகுறிகள் தெரிந்த உடனேயே, சமாளிப்பதற்கான வழிமுறைகளை பின்பற்றுதல்
3. பிரிவினை வாதத்தை தூண்டுவோரை கண்காணித்தல்
4. பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகள், மக்கள் கூடும் இடங்கள், மறைவிடங்களை கண்காணித்தல்
5. புரளிகள் பரவாமல் தடுத்தல்
6. புரளிகள் பிற மாநிலம் (ம) மாவட்டங்களில் பரவாமல் தடுத்தல் (ம) கண்காணித்தல்

**தீவிரவாதம்**

**12. தீவிரவாதம் – தன்மைகள், நோக்கங்கள்**

**தீவிரவாதம்**

தீவிரவாதம் என்பது தனிமனிதனாலோ (அ) ஒரு சட்டத்தினராலோ, ஒரு தனி மனிதனுக்கோ (அ) ஒரு கூட்டத்தினருக்கோ ஏற்படும் பிரச்சனைகள் மூலம் பொது மக்களுக்கு பயத்தை ஏற்படுத்துவதாகும்.

**தன்மைகள்**

1. அரசு (அ) சமுதாயத்திற்கு எதிரானது
2. அரசியல் காரணங்களை கொண்டது
3. சட்ட விரோதமானது
4. மக்களின் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி அவர்களை தங்களுக்கு அடிபணியச் செய்வதை நோக்கமாக கொண்டது.
5. மக்களின் இயலாமை உணர்வுடன் இணைந்திருக்கின்றது.
6. நியாயமான சிந்தனையை தடை செய்கின்றது.
7. சண்டை (ம) போராட்டத்திற்கு வழிவகுக்கின்றது.
8. தாக்கப்பட வேண்டிய நபர்களின் தேர்வு பாரபட்சமற்ற முறையில் நடைபெறுகின்றது.

**நோக்கங்கள்:**

1. தங்களின் தீயநோக்கங்களுக்காக அரசை தங்களின் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருத்தல்
2. வன்முறையில் ஈடுபட்டு தங்களின் கோரிக்கைகளை அடைதல்
3. தீவிரவாத தேவைகளை நிறைவேற்ற அரசை நிர்பந்தித்தல்
4. உள்நாட்டு நிலைத்தன்மை (ம) பொருளாதார வளர்;ச்சியைத் தடுத்தல்
5. தீவிரவாதத்திற்கு இளைஞர்களை ஊக்குவிப்பதன் மூலம், தீவிரவாதத்தை வளர்த்தல்
6. மக்களிடையே அச்ச உணர்வை ஏற்படுத்தி, அரசின் பாதுகாப்புப் படைமீது நம்பிக்கை இழக்கச் செய்தல்
7. ஸை. தீவிரவாத குழுக்கள், பின்பற்றுபவர்கள் அவர்களிடையே நம்பிக்கையுணர்வு வளர்த்தல் போன்ற செயல்களில் ஈடுபடுதல்

**13. தீவிரவாதம் தோன்ற காரணங்கள்**

தொலைதொடர்பு புரட்சி (ம) நவீன நகர்ப்புற நாகரிகம் மூலம் தீவிரவாதிகள் பெரிய அளவிலான அரசியல் தளத்தில் சுதந்திரமாக செயல்பட முயற்சித்தனர்.

**தீவிரவாதம் தோன்றக் காரணங்கள்:**

1. தீவிரவாதம் ஒரு நாளில் தோன்றுவதில்லை, அது தொடர்ச்சியான பல்வேறு அழுத்தங்களால் தோன்றுகிறது.
2. பொறுப்பற்ற, திறனற்ற அரசு நிர்வாக அமைப்பு
3. ஊழல் மலிந்த அரசுத் துறைகள்
4. பாதுகாப்புப் படையின் திறமையின்மை
5. பழமையான தீவிரவாத எண்ணங்கள்
6. உலகளாவிய தகவல் தொடர்பு முறையின் மூலம் தீவிரவாத தகவல்கள் எளிதில் பரிமாற்றம்
7. சமுதாய ஒடுக்கு நடைமுறை
8. வேலைவாய்ப்பில் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தினரின் ஆதங்கம்
9. வறுமை, பசி. வறட்சி போன்றவைகளில் அரசின் மற்ற செயல்பாடு
10. எளிதில் ஆயுதங்கள், வெடிபொருட்கள் கிடைத்தல்
11. அந்நிய நாடுகளிலிருந்து தீவிரவாதக் குழுக்களுக்கு பணப்பரிமாற்றம். ஊக்குவிப்புச் செயல்பாடுகள்
12. திறமையற்ற உளவுத்துறை
13. நீதித்துறையில் உள்ள குறைபாடுகள்
14. ஏற்றத் தாழ்வுகள்
15. சாதி, மத, இனம் மீது கொண்டுள்ள அதீதபற்று.
16. இளைஞர்களிடையே காணப்படும் அறியாமை, கல்வியறிவின்மை
17. கடத்தல் மூலம் பெறும் வருமானத்தை தீவிரவாத செயல்களில் ஈடுபடுத்தல்
18. பழமையான சட்டங்கள்
19. சர்வாதிகளுக்கு எதிரான குடிமக்களின் கிளர்ச்சி
20. பயங்கரவாதத்திற்கு கிடைக்கும் பரவலான விளம்பரங்கள்
21. மதத்தின் அடிப்படையில் பங்கரவாதிகளுடன் இணைந்த நிலை

**14. தீவிரவாதத்தால் ஏற்படும் விளைவுகள்**

1. அரசின் நிர்வாக செயல்பாடுகள் (ம) பாதுகாப்புப்படை மீது நம்பிக்கை இழத்தல்
2. நிலைத்தன்மை இன்மை, பொது அமைதி சீர்குலைவு.
3. பொதுச் சொத்துக்கள் பாதிப்படைதல்
4. மனித உயிரிழப்பு

5. பொருளாதார ஸ்திரத் தன்மை இழத்தல்
6. சமூக வளர்ச்சியின்மை
7. சுற்றுலா, தொழில், விவசாய வளர்ச்சிகள் பாதித்தல்
8. பொதுமக்களின் இடம் பெயர்தல் அதிகரித்தல்
9. அச்சத்தால் தொழில் துவங்கி நடத்துவது குறைதல்
10. அரசியல் அமைதி இன்மை

**15. தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை விளக்குக.**

1. தீவிரவாதம் பல்வேறு அமைப்புகள் சார்ந்த, பல்வேறு நடவடிக்கைகளுடன் தொடர்புடையது.
2. எனவே இது சார்ந்த ஒழிப்பு நடவடிக்கைகள் அனைத்தும், அனைவரது நலன் சார்ந்த ஒரு செயலாக அமைதல் வேண்டும்.

**1. குறுகிய கால நடவடிக்கைகள்**

1. தண்டனைகள், கடுமையான நடவடிக்கைகள் மூலம் தீவிரவாதிகளை மனமாற்றம் அடையச் செய்தல்
2. உளவுப் படையில் புதிய தொழில் நுட்பங்களையும், தகவல் தொடர்பு சாதனங்களையும் பயன்படுத்துதல்
3. சட்டங்களில் காணப்படும் குறைகளை நீக்கி, தீவிரவாதத்தை ஒடுக்க புதிய சட்டநெறிமுறைகளை உருவாக்குதல்.
4. தீவிரவாதம் குறித்த தகவல் அளிப்போருக்கு உரிய பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்துதல்
5. தீவிரவாதத்திற்கு எதிரான சிறப்புப் படைப்பிரிவினரை உருவாக்கி, முறையான பயிற்சி அளித்தல்
6. கிராம பாதுகாப்பு குழுக்களை உருவாக்கி, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் தீவிரவாத தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

**2. நீண்டகால நடவடிக்கைகள்**

1. சந்;தேகத்திற்குரிய இளைஞர் குழுக்கள், அமைப்புகளை முறையாக கண்காணித்தல், ஆராய்தல்.
2. நாட்டுப்பற்றை வளர்க்க கூடிய செயல்பாடுகளில் அரசு ஈடுபடுதல்.
3. தவறாக வழிநடத்தப்படும் இளைஞர்களுக்கு முறையான வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருதல்.
4. அரசின் மேன்களை விளக்கி, தீவிரவாத எண்ணங்களை ஒழித்தல்
5. இளம்தொழில் முனைவோரை ஊக்குவித்து தொழில் பெருக்க நடவடிக்கைகளை கையாளுதல்.
6. ஏற்றத்தாழ்வுகளை களைத்து வறட்சி, வறுமை நிலையை ஒழித்தல்
7. போதிய கல்வியறிவு வழங்குவதன் மூலம் அறியாமையை அகற்றுதல்
8. பொருளாதார வளர்ச்சியை பெருக்குவதன் மூலம். அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்

**ஐ.நா. சபையின் நடவடிக்கைகள்**

1. 1997 – தீவிரவாத அணுகுண்டு தாக்குதல்களை ஒடுக்குதல்
2. 1999 – தீவிரவாத மேம்பாட்டிற்கான நிதியுதவிகளை தடுத்தல்
3. 2005 – ஐ.நா.வின் பொது அவையில், நியூயார்க் அணு ஆயத தீவிரவாதத்தை ஒடுக்குதல் தீர்மானம் நிறைவேற்றம்.
4. 14வது சர்வதேச தீவிரவாத தடுப்பு நடவடிக்கைக்கான மாநாட்டில், உலகளாவிய எதிர்தீவிரவாத போர்த்திறம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**16. இந்தியாவில் தீவிரவாத இயக்கங்கள்**

**1. பஞ்சாப் – காலிஸ்தான் தீவிரவாதம்**

1. தனிநாடு கோரிக்கை அடிப்படையிலான சீக்கிய தீவிரவாதம்
2. 1984 – 85 ல் தீவிரவாதம் அதிகமாகி, படுகொலைகள் நிகழ்;ந்தன.
3. வழிபாட்டுத்தலங்கள் ஆயுதக்கிடங்குகளாக மாற்றப்பட்டன.
4. 1985ல் அகாலிதள தலைவர் சட்டங்களை வெளியிடுவதன் மூலம் அரசின் அதிகாரத்தை குறைத்தல்
5. தங்களது சொந்த சட்டங்களை வெளியிடுவதன் மூலம் அரசின் அதிகாரத்தை குறைத்தல்
6. தங்களை சீக்கியர்களின் பாதுகாவலர்களாக சித்தரித்தல்
7. பஞ்சாபில் உள்ள இந்துக்களை பிறமாநிலங்களுக்கு இடம்பெயர வற்புறுத்தல்
8. கொலை, கொள்ளை, அச்சம் உருவாக்குதல்
9. தற்போது பெருமளவு கட்டுப்படுத்தப்படுகிறது.

**2. காஷ்மீர் – பிரிவினைவாத தீவிரவாதம்**

1. காஷ்மீரில் பிரிவினை, வேற்றுமை, வளர்ச்சியின்மை, மதச்சார்ந்த (ம) பாகிஸ்தான் தீவிரவாத செயல்பாடுகள் நடைபெறுகின்றன.
2. காஷ்மீரில் பாகிஸ்தான் தீவிரவாதத்தை ஊக்குவிக்கிறது.
3. காஷ்மீரில் உள்நாட்டு பதற்றத்தை உண்டாக்குதல்
4. ஜிகாத் வழி போராட்டத்தை உண்டாக்குதல்
5. இராணுவம் (ம) அரசியல், பொருளாதார நடவடிக்கைகளை அரசு கையாள்கிறது.
6. இந்திய – பாகிஸ்தான் போர்

**3. நக்சலைட்டுகள்**

1. 1967 – மேற்கு வங்காளத்தைச் சார்ந்த காணுசன்யால், சாரு மஜீம்தார் ஆகியோரால் நில உரிமையாளர்களை எதிர்த்து ஆரம்பிக்கப்பட்டது.
2. மாவோயிஸ்ட் பொதுவுடைமை சேர்ந்தவர்களால் பலவாறு மாறியது.
3. சாரு மஜீமதாரர் – நிர்மூலமாக்கும் திட்டம் மூலம் இந்தியாவில் பரவியது.
4. நக்சல்களின் பரவல் – சத்தீஸ்கர், ஒரிசா, ஜார்கண்ட், W.B.V.P. மகாராஷ்டிரா.

**நோக்கங்கள்**

1. அரசை கைப்பற்றுதல்
2. நக்சல்களின் எண்ணிக்கையை அதிகரித்து, அதன் ஆக்கிரமிப்புகளை பெருக்குதல்
3. கொரில்லா குழுக்கள் மூலம் சுதந்திரமான அமைப்பை ஏற்படுத்துதல்
4. நில உரிமையாளர்களிடமிருந்து நிலங்களை அபகரித்து நிலமில்லாதோருக்கு வழங்குதல்.
5. காவல்துறை, பொதுமக்களிடையே அச்ச உணர்வை ஏற்படுத்தி தங்களது வலிமையை அதிகரித்தல்

**காரணங்கள்:**

1. நில உடைமையாளர்களால் உள்ளூர் வரிகள் நசுக்கப்பட்டமை
2. அரசின் திட்டங்கள் முறையாக மக்களை சென்று அடையாதது
3. ஏற்றத்தாழ்வு சமுதாயம்
4. அதிகார (ம) செல்வக் குறைவு
5. வறுமை, வேலைவாய்ப்பு குறைவு
6. நில பகிர்வு முறைகளில் முறைகேடு
7. பொறுப்பற்ற அரசு நடவடிக்கைகள்
8. சிறுகுழுக்களின் தோற்றம்
9. மோசமான குடியுரிமை அமைப்பு
10. பற்றாக்குறையான காவல்துறைப்படை

11. ஊழல் மலிந்த அரசு நிர்வாகம்

**4. உல்ஃபா தீவிரவாதம் – அசாம்**

1. 1980 முதல் அசாமில் தீவிரவாதம் உருவாகியுள்ளது.
2. அன்னியர்களை வெளியேற்றுமாறும், அவர்களது பெயரை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்குமாறும் அசாமியர்கள் கோரினர்.
3. 1983 தேர்தல் வன்முறையில் 5000 பேர் உயிரிழப்பு
4. தனிமாநில வன்முறை உருவாக்கம்
5. கொலை, கொள்ளை, கடத்தல் நடவடிக்கைகள்
6. 1991ல் ஆப்ரேக்ஷன் பஜரங் நடவடிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது

**நடவடிக்கைகள்**

1. நீல நட்சத்திர நடவடிக்கை – 1984 பஞ்சாப்
2. ஆப்ரேக்ஷன் பிளாக்தண்டர் – அசாம் 1986
3. ஆப்ரேக்ஷன் பஜ்ரங் – அசாம் 1991

**5. தேசிய பாதுகாப்புச் சட்டம் – 1980 (NSA)**

1. இச்சட்டம் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டது.
2. நோக்கம் – பாதுகாப்பு அளித்தல் (ம) சிலவழக்குகள் தொடர்புடைய வன்முறைகளிலிருந்து பாதுகாத்தல்
3. மத்திய / மாநில அரசு சந்தேகத்திற்குரிய தனிநபரை கைதுசெய்து காவலில் வைக்கமுடியும்.
4. வெளிநாட்டிலிருந்து பாதகமான ஆயத தடுப்பு (ம) சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் அதிகாரம்

**6. தீவிரவாத (ம) பலவந்த செயல்கள் தடுப்புச்சட்டம் – 1985 (TADA)**

**நோக்கம்**

1. தீவிரவாதம் (ம) தீவிரவாதிகளை கட்டுப்படுத்த ஏற்படுத்தப்பட்டது.
2. 1995 ல் நீக்கப்பட்டது

**சிறப்புகள்**

1. சிறப்பு நீதி மன்றம் அமைப்பு
2. பிணையில் வெளிவரதடை
3. ஒரு வருடம் வரை புலனாய்வு மேற்கொள்ள அனுமதி
4. அனைத்து விசாரணைக்கும் ஒளிப்படுத்துதல்
5. காவல்துறை சாட்சியங்களை ஏற்றுக்கொள்ளுதல்
6. சட்ட விரோதமாக ஆயுதம் வைத்திருக்க தடை
7. தனிநபர்கள் விசாரணையின்றி காவலில் வைப்பது
8. குற்றம் சாட்டப்படும் தனிநபர்களின் உரிமைகளை தடை செய்தல்

**குறைபாடுகள்**

1. சிறுபான்மையினருக்கு எதிராக பயன்படுத்துதல்
2. பொதுமக்களுக்கு எதிராக பயன்படுத்துதல்
3. சிறு குற்றங்களுக்கு கூட கடுமையான தண்டனைகள்
4. சில வகையான ஆயுதங்களுக்கு கூட 5 வருட தண்டனை
5. ஒரு திறனற்ற சட்டம், யாருக்கும் தண்டனைகள் இதன் மூலம் பெறப்படவில்லை.

**பயங்கரவாத தடுப்புச்சட்டம் – 2001 (PGA)**

இது 2004 ல் நீக்கப்பட்டது.

தீவிரவாத்திற்கு எதிரான தீர்மானம் – 1973

ஐ.நா. சபையின் பாதுகாப்பு கவுன்சிலின் இத்தீர்மானத்தில் இந்தியா கையெழுத்திட்டது.

**அமைப்புகள்**

1. அயல்நாட்டு பரிவர்த்தனை பாதுகாப்பு (ம) கள்ளக் கடத்தல் தடுப்பு – 1974
2. போதைப்பொருள் (ம) சட்டத்திற்கு புறம்பான பொருள்கள் தடுப்பு – 1988
3. தேசிய விசாரணை அமைப்பு – 2008 (NIA)
4. இது தீவிரவாதம் தொடர்பான வழங்குகளை ஆராய ஏற்படுத்தப்பட்டது. காரணம் : மும்பை தாக்குதல்
5. பிற புலனாய்வ அமைப்புகளின் தோல்வி
6. தலைமையிடம் – புதுடெல்லி (மாநிலங்கள்)

**செயல்பாடுகள்:**

1. NIA ஆனது ஐ.நா. அமைப்பு, புலனாய்வு குழுக்கள், சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றுகிறது.
2. இது சுதந்திரமான, தீவிரவாதத்திற்கு எதிரான அமைப்பு
3. மாநில அரசின் அனுமதி இல்லாமலேயே வழங்குகளை விசாரிக்கும் அதிகாரம்
4. NIA அதிகாரிகளுக்கு வழங்குகளை விசாரணை மேற்கொள்ள அனைத்து அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளது.

**17. தீவிரவாதத்தை எதிர்கொள்ளும் முறைகள்**

**1. இஸ்ரேல் முறை**

1. தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தைக்கு இடம் இல்லை.
2. தீவிரவாதிகளின் மீது திடீர் தாக்குதல்
3. மிக கடுமையான பாதுகாப்பு அணுகுமுறை
4. பாலஸ்தீன தீவிரவாதிகள் மீது கடுமையான தாக்குதலை கையாளுதல்
5. இம்முறை எதிர் – திவிரவாதமுறை எனப்படுகிறது.

**2. அமெரிக்கா முறை**

1. உலக பொருளாதாரத்தில் முக்கிய இடம்பெறும் ஏளுயு தீவிரவாதத்தினால் அதிகம் பாதிக்கப்படுகிறது.
2. தீவிரவாதத்திற்கு எதிரான கடுமையான நிலைப்பாட்டை கொண்டுள்ளது.
3. தீவிரமாக ஆதரவு நாடுகளுக்கு எதிராக வர்த்தக தடை, ஏற்றுமதி தடை.
4. தீவிரவாத நாடுகளின் மீது அணுகுண்டு தாக்குதல்
5. இம்முறையில் தீவிரவாதத்தை அடியோடு அழிக்கும் போக்கை கடைபிடிக்கிறது.
6. தீவிரவாத நாடுகளின் மீது போர் தொடுத்தல்

**3. இந்திய அணுகுமுறை**

1. 1960 க்கு பிறகு தீவரவாதத்தால் இந்தியா பெரிதும் பாதிக்கப்பட்டுள்து.
2. JK மாநிலத்தில் பிரிவினை வகுப்பவாத கலவரங்கள் மேலோங்கி உள்ளன.
3. 1984 பஞ்சாப்பில் நீலநட்சத்திர நடவடிக்கை, 1986 அசாமில் பிளாக்தண்டர் நடவடிக்கை போன்ற தீவிரவாத எதிர் நடவடிக்கைகள் தோல்வியில் முடிவடைந்தன.
4. எதிர்தீவிரவாத நடவடிக்கை காவல்துறை (ம) ராணுவத்தால் மேற்கொள்ளப்படுகிறது.
5. முறைகள்: சோதனைக் சாவடி அமைத்தல்
6. முக்கிய இடங்கள் (ம) நபர்களுக்கு பலத்த பாதுகாப்பு

7. சாத்வீகமாக நடவடிக்கைகளுக்கே அதிக முக்கியத்துவம் தருகிறது.
8. தீவிரவாதிகளின் கோரிக்கைகளுக்கு சில சந்தர்ப்பங்களில் அரசு அடிபணிந்துள்ளது.

**18. வடகிழக்கு மாநிலங்களில் ஏற்படும்; கிளர்ச்சி ஃ கலவரம் விவரி.**

**வடகிழக்கு மாநிலங்களில் கலவரம்**

இந்திய அரசாங்கத்திற்கு எதிராக வன்முறையைத் தூண்டும் விதமாக உள்ளூர்வாசிகள் (அ) குழுக்கள் ஏற்படுத்தும் அபாயகரமான நிகழ்வே கலவரம் எனப்படுகிறது.

**அசாம்**

1. 1980 களில் ஆரம்பமானது
2. அசாமில் உள்ள வெளிநாட்டவர்களது பெயரை அம்மாநிலத்தில் உள்ள தேர்தல் வரைவிலிருந்து நீக்குதல்
3. அவர்களை மாநிலத்தை விட்டு வெளியேற்றுதல்
4. உல்பா அமைப்பு உருவாக்கம்
5. அனைத்து போடோ மாணவர் சங்கம் தனிமாநில கோரிக்கையை உருவாக்கியது.
6. 1994 ல் ஆரம்பிக்கப்பட்ட போடோலேண்ட் பிரச்சனை இன்றும் தீர்க்கப்படவில்லை.

**மீசோரம்**

1. 1966 களிலிருந்து கிளர்ச்சி துவக்கம்
2. மிசோரம் (ம) மிசோரமில்லாத பழங்குடியினருக்கு இடையிலான தகராறுகள் ஏற்பட்டுள்ளது.

**மணிப்பூர்**

1. 1976 ல் துவக்கம்
2. 1978ல் மக்கள் விடுதலைப்படை உருவாக்கம்
3. மைத்ரி (ம) குகி மலைவாழ் மக்கள் புரட்சி

**நாகலாந்து**

1. 1951 ல் கிளர்ச்சி
2. பிரச்சனை – அடையாள சின்னம்
3. அசாம் மலைப்பகுதியில் பெருநாகலாந்து அமைத்தல்
4. தேசிய விடுதலை மையம் இதில் தீவிரவாதம் காட்டுகிறது.

**திரிபுரா**

1. திரிபுராவிலிருந்து வங்காளத்திற்கு இடம்பெயர்தலை தடுத்தல்
2. திரிபுரா தேசிய இயக்கம் திரிபுரா புலிகள் படை இதில் பங்கேற்கிறது.

**மேகாலயா**

மலைவாழ் (ம) மலைவாழ் அல்லாத மக்களிடையே பிரச்சனைகள் இடம் பெறுகின்றன.

அருணாச்சலப்பிரதேசம்

அவ்வப்போது சீனாவின் தாக்குதல் (அ) அத்துமீறலால் இப்பகுதி எல்லைகள் பாதிக்கப்படுகிறது.

**19. தீவிரவாதத்தின் சமூகவியல்**

1. பெரும்பாலும் தீவிரவாதம் மக்களையும், சமூகங்களையும் பிளவுபடுத்தும் ஒரு கருவியாக செயல்படுகிறது.
2. இருப்பினும் சில நேரங்களில் ஒரு பொதுவான நோக்கத்திற்காக மக்களை ஒன்றிணைக்கும் ஒரு ஒருங்கிணைப்பு கருவியாக செயல்படுகிறது.
3. தீவிரவாதம் என்பது ஒரு சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஆனால் அது சமூக முறைகளை பாதிப்பது இல்லை.
4. அது சமூக மாற்றத்தினை துரிதப்படுத்துவதற்கான ஒரு கருவியும் அல்ல.

5. இன்றுவரை எந்தவொரு தீவிரவாத இயக்கமும் அதன் இலட்சியங்களை அடைவதில் வெற்றி பெறவில்லை.
6. எனவே வரலாற்று நிகழ்வுகள் தீவிரவாதிகளால் வடிவமைக்கப்படுவதில்லை.

**பாதிப்பும் நடவடிக்கையும்**

1. ஒரு ஆண்டில் பீகாரில் தீவிரவாதத்தால் கொல்லப்படும் (அ) கடத்தப்படும் நபர்களின் எண்ணிக்கையானது பஞ்சாப் (அ) காக்ஷ்மீரில் கொல்லப்படும் (ம) கடத்தப்படும் நபர்களின் எண்ணிக்கையைவிட அதிகம்.
2. தீவிரவாத செயல்பாட்டால் அரசியல் (ம) சமூக அமைப்புகளின் இயல்பான நிர்வாக நடவடிக்கைகளில் தற்காலிகமாக சிறிய தடை ஏற்படும்.
3. தீவிரவாத கொலைகளால் சமுதாயத்தின் அரசியல் நடைமுறையினை பெரிய அளவில் பாதித்து விட இயலாது.
4. தீவிரவாதத்தால் கொல்லப்படும் நபர்களின் எண்ணிக்கையைவிட, அவர்களின் முக்கியத்துவமே பாதிப்பிற்கு காரணமாகும்.
5. (எ.கா) ராஜீவ்காந்தி படுகொலை
6. எனவே தீவிரவாத செயல்பாடுகளை முழுவதும் வெற்றிகரமானவை (அ) தோல்விகரமானவை எனக் கூற இயலாது.
7. தீவிரவாதிகளால் அரசின் அதிகாரத்தை பலவீனப்படுத்த முடியுமே தவிர, சமூக அமைப்பினை அழித்துவிட இயலாது.
8. தீவிரவாதத்தால் சமூகத்தினை முழுவதும் பிளவுபடுத்த இயலாது.

**இந்தியாவில் தேவையான நடவடிக்கைகள்:**

1. இளைஞர்கள் ஏமாற்றம் (ம) தோல்விகளால் தவறான வழியில் செல்வதை தடுக்க வேண்டும்.
2. அரசு இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும்.
3. தீவிரவாதிகள் ஒழிக்கப்பட்டு ஜனநாயகம் செயல்படுவதற்கு தேவையான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

**20. இந்தியாவில் நடைபெற்ற தீவிரவாததாக்குதல் பற்றி எழுதுக.**

1. மும்பை குண்டு வெடிப்பு - 1993
2. கோவை குண்டு வெடிப்பு - 1998
3. பாராளுமன்றத் தாக்குதல் - 2001
4. மும்பை இரயில நிலைய தாக்குதல் - 2008
5. அகமதாபாத் அக்க்ஷர்தாம் கோயில் தாக்குதல் - 2002
6. டெல்லி தொடர் குண்டு வெடிப்பு - 2005
7. ஜெய்ப்பூர் வெடிகுண்டு தாக்குதல் - 2008
8. அசாம் குண்டு வெடிப்பு - 2008
9. காக்ஷ்மீர் சட்டப் பேரவை தாக்குதல் - 2001